# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**STC.No.120/2024**

Deposition of Witness of PW6

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரபாகரன் | Calling | : |
| Father/Husband's Name | : கணபதி | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 12th May 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் 2023ம் வருடம் மொடக்குறிச்சி காவல்நிலையத்தி உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது கும்பகோணத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 09.03.2023 ம் தேதி நான் மொடக்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது ஈரோடு மணியன் மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற முருகன் என்பவரின் RTI இன்டிமேசனை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த முருகன் என்பவர் மயக்கநிலையில் இருந்ததால் அவருக்கு உதவியாக இருந்து அவரது மனைவி சாமுண்டீஸ்வரியை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண். 39/2023 சட்டபிரிவுகள் 278, 337 இதச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. வழக்கு கோப்பினை 09.03.2023 ம் தேதி நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மதியம் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தின் சாட்சிகள் ராமசாமி, செல்வகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டும் பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் சாமுண்டீஸ்வரி, முருகன், ராஜேஸ், சுரேஷ் ராமசாமி செல்வகுமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 21.03.2023ம் தேதி எதிரி சுபாஷ் ஈரோடு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.3ல் சரணடைந்து பிணையில் சென்ற விபரம் தெரியவந்தது. அன்றே எதிரி வாகனம் TN 33 BW 4711 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன். 30.03.2023 ம் தேதி காயம்பட்ட நபர் ஓட்டி சென்ற TN 33 BR 2999 என்ற இருசக்கர

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.05.12 17:16:07 +0530

வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன்.

3. 17.04.2023 ம் தேதி மருத்துவர் செந்தில்குமரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றேன். **விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 ஆகவும், காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதழின் அடிப்படையில் சட்ட பிரிவுகளை 279, 337 இதச பிரிவில் இருந்து 279,338 ஆக இதச பிரிவாக மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இருசக்கர வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம்பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8, 9 ஆக குறியீடு செய்யப் படுகிறது.** பின்பு எனது புலன்விசாரணை முடித்து ஆஜர் எதிரி மீது வழக்கின் புலன் விசாரணை முடித்து இதச பிரிவு 279, 338 ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

ஈரோடு டூ முத்தூர் ரோடு தென்வடல் ரோடு என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள பாலமுருகன் ேஹாட்டல் தென்வடல் ரோட்டிற்கு கிழபுறமாக உள்ளது என்றால் சரிதான். சம்பவமே காயம்பட்ட முருகன் ேஹாட்டலில் இருந்து சாப்பிட்டு விட்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் போது தான் இந்த வழக்கு சம்பவம் நடந்தது என்றால் சரிதான். வழக்கு சம்பவமானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் போது ரோட்டிற்கு இடதுபுறமாகத்தான் நடந்தது என்றால் சரிதான். வழக்கு சம்பவமானது தென்வடல் ரோட்டிற்கு மையப்பகுதியில் நடந்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்திருந்தால் அது பொய்யானது என்றால் ஆம்.

2. காயம்பட்டவர் ஓட்டி வந்த இருசக்கரத்தின் பின்புறத்தில் தான் சேதாரம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முன் மற்றும் பின்புற பகுதியில் சேதாரம் ஏற்படவில்லை, வாகனத்தில் இரண்டு பக்கங்களிலும் சேதாரம் ஏற்பட்டது. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து வழக்கின் சான்றாவணங்களை தயார் செய்யப்பட்டுளள்து என்றால் சரியல்ல. வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் போது சம்பவ இடமானது சற்று மேடான பகுதி என்றால் தற்போது நினைவில் இல்லை.

3. மேற்படி விபத்தானது காயம்பட்ட முருகன் இருசக்கர வாகனத்தை கவனிக்காமல் நண்பர்களுடன் பேசிக்கொண்டு திடீரென ரோட்டிற்கு வந்து வாகனத்தை இயக்கியதால் அவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவும், அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.05.12 17:16:13 +0530

என்றால்சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து அதன் பேரில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.05.12 17:16:17 +0530